**IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM. RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**

**SC.No.218/2024 - PW-8**

| | |
|---|---|
| Name | திரு. ரவி |
| Husband/Father Name | சண்முகம் |
| Village /Area | நந்திமங்களம் |
| Taluk | சோளிங்கர் |
| Occupation | கிராம உதவியாளர் |
| Age | 57 |
| Religion | இந்து |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 23.09.2025.

**(எதிரி ஆஜர்).**

**முதல் விசாரணை :**

நான் தற்போதும் சம்பவத்தின் போதும் பழைய பாளையம் கிராமத்தில் கிராம உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். 08.05.2024 ஆம் தேதி காலை 06.00 மணியளவில் பானாவரம் காவல் ஆய்வாளர் என்னையும் கிராம நிர்வாக அலுவலர் கார்த்திக் என்பவரையும் பழைய பாளையம் ஏரிக்கரையில் வடிவேல் என்பவரை கைது செய்திருப்பதாக கூறி எங்களை அழைத்ததன் பேரில் நாங்கள் அங்கு சென்றோம். அப்போது காவல் ஆய்வாளர் வடிவேலு என்பவர் சண்முகத்தை கட்டையால் அடித்து காயம் ஏற்படுத்தியதாகவும் வேலூர் அரசு மருத்துவமனையில் சண்முகம் சிகிச்சையில் இருப்பதாகவும் இது சம்பந்தமாக வடிவேலுவை கைது செய்து எங்கள் முன்னியலையில் எந்தவிதமான வற்புறுத்தலுமின்றி வடிவேலு தானாக கொடுத்த வாக்குமூலத்தின் அடிப்படையில் சண்முகத்திற்கும் எதிரி

வடிவேலுவிற்கும் பணம் கொடுக்கல் வாங்கலில் பிரச்சனை இருந்ததகாவும், இதனால் பிரச்சனை ஏற்பட்டு விறகு கட்டையால் சண்முகத்தை அடித்தாககவும், அவர் மயங்கி விழுந்துவிட்டதால் பயந்து கொண்டு பெங்களூர் செல்லலாம் என்று பழைய பாளையம் ஏரிக்ரையில் வந்த போது போலீசார் கைது செய்து விசாரித்துக்கொண்டிருந்த போது அவர் என் முன்னிலையில் கிராம நிர்வாக அலுவலர் முன்னிலையிலும் அவர் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமுலத்தை போலீசார் பதிவு செய்து கொண்டார்கள். மேற்படி ஒப்பதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் ஆஜர் எதிரியை அவருடைய வீட்டிற்கு அழைத்து சென்ற போது அவர் அவர் வீட்டின் பாத்ரூமில் இருந்து கீழ்கண்ட பொருட்களை எடுத்து ஆஜர் செய்தார். இரத்த கரை படிந்த வெள்ளை சாம்பல் நிற பச்சை கோடு போட்ட முழுக்கை சட்டை ஒன்று, இரத்த கறை படிந்த இளம் சிவப்பு கலர் வெள்ளை கோடு போட்ட வேட்டி ஒன்று, சுமார் 65 செ.மீ நீளம் கொண்ட விறகு கட்டை அதில் இரத்தக்கறை படிந்திருந்தது. மேறப்டி ஒப்புதல் வாக்குமுலத்தில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான் அது **அதசாஆ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதனை போலீசார் மகஜரில் கைப்பற்றிக் கொண்டார்கள். இரத்த கரை படிந்த வெள்ளை சாம்பல் நிற பச்சை கோடு போட்ட முழுக்கை சட்டை, இரத்த கறை படிந்த இளம் சிவப்பு கலர் வெள்ளை கோடு போட்ட வேட்டி ஆகியவை ஏற்கனவே சா.பொ ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான் அது **அதசாஆ.10** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது சம்பந்தமாக பானாவரம் காவல் ஆய்வாளர் விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு

செய்தார்.

<u>**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**</u>

வழக்கறிஞர் ஆஜர் ஆகாததால் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

Jayamangalam Sudhakaran

II Additional District Judge, Arakkonam
Digitally signed by Jayamangalam Sudhakaran
Date: 2025.09.23 17:44:45 +0545

II Additional District and Sessions Judge,

Arakkonam.